1984 மார்ச் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்லியதைப் போல, நேரிடையாகக் கண்டு, பல்வேறு தகவல்களின் அடிப்படையில் வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், நாளை வரை அங்கே முகாமிட்டு பணிகளை கவனிக்க இருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால், இன்னொரு நாள் இருந்து அந்தப் பணிகளை நடத்துகின்ற அளவுக்கு இருக்கிறார்கள்.

(ஆ) கர்நாடகத்தில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, கர்நாடகாவிலே இன்னும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி நம்முடைய நாவலர் அவர்கள் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் கூட நாம் பேசினோம். ஆனாலும் இது வரையில் நிலைமை சரியாக இல்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் இன்னும் நிலைமை சரியில்லை என்றும், கர்நாடகாவில் ரொம்ப ரொம்ப மோசமாக இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். ஆகையினாலே அரசுத் தரப்பிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்கிறபோது, சில பிரச்னைகளை எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கனவே, இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே ஏன் வைக்க வேண்டும் என்ற விவாதம் நடைபெற்ற போது, இந்த அரசின் மூலமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அதில் எந்தெந்த அளவுக்கு தக்கவர்களுடன் தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு மேற்கொள்வதாக கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், அமைதியைக் காப்பாற்றவும், கலவரங்கள் ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதற்குமான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் சிலபல இடங்களில் சிலர் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட ஊர்வலங்கள் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தாலும் கூட கலவரங்கள் நடப்பது தடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கர்நாடகத்தில் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைகள் பத்திரிகைகளிலே செய்தியாக வந்துக்கொண்டிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 9

அங்கேயிருக்கிற எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், பொதுமக்களுடைய பிரதிநிதிகளும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மற்ற பிரதிநிதிகளும், ஆகிய அத்தனை பேர்களும் சேர்ந்து ஒரு அமைதியான, சுமூகமான பாதுகாப்பு சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, அங்கேயிருக்கின்ற அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரையில் ஹோசூர் தாண்டிச் செல்கிற பஸ்கள், லாரிகள் மற்றவைகளுக்கெல்லாம், வழியில் சிறுசிறு கிராமங்களில் இருப்பவர்களெல்லாம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு சேதம் ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகும் என்பதற்காக, 2 நாட்களாக அவைகளையெல்லாம் நிறுத்தி வைத்திருந்தோம்.

கர்நாடக மாநிலத்தின் காவல் துறை உத்திரவாதம் அளித்ததின் பேரிலே, தக்க பாதுகாப்புகள் வழி முழுவதும் ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னதின் பேரிலே நேற்று மாலையிலிருந்து, இரவிலிருந்து லாரிகளும், பஸ்களும் கர்நாடகத்தை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறன. முழு பாதுகாப்பு தருவதாக அங்கேயிருக்கிற தலைமைப் போலீஸ் அதிகாரிகளும், மற்றவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். நேற்றைய தினத்தைப் பொறுத்த வரையில் ஓரளவிற்கு அடங்கிய நிலை இருப்பதாக செய்தி தெரிகிறது. இரு பக்கங்களிலும் சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக கர்நாடக மாநிலத்திலே ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொறுத்திருந்து அதற்கான தக்க நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சம்பந்தமாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள். அவர் அங்கே பார்வையிடுகிற நேரத்தில், அவர்களோடு உரிய அதிகாரிகளும் மற்றவர்களும் உடன் கலந்து கொண்டிருக்கிறபோது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்லிய கருத்து அங்கே எடுத்துச் சொல்லப்படுமானால்—சொல்லப்படுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறேன்—அதற்குத் தக்க நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், வேறு பல வகைகளிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறேன். அதுமட்டும் அல்லாமல், அங்கேயுள்ள அதிகாரிகள் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்ல தவறினாலும், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறனைப் போன்றவர்கள் அங்கே இருப்பார்கள், அவர்கள் அந்தக் கருத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் என்று கருதுகிறேன். அப்போது, அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அது பற்றிய விவரம் வந்தால் பின்னால் தெரிவிக்கலாம்.